**புத்தளம் நகர சபை**
**புத்தளம் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூலை 20 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து புத்தளம் நகர சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) நகர சபைக்குச் சொந்தமான ரூபா 846,698 தொகையான விற்பனைக் கடையொன்றின் பெறுமதி மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் ஏனைய காணிகளினதும் கட்டிடங்களினதும் பெறுமதிகள் மற்றும் ரூபா 27,498,520 கூட்டுப்பெறுமதியான மூன்று மோட்டார் வாகனங்கள் மற்றும் 03 உழவு இயந்திரங்கள் என்பவற்றின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பெறவேண்டிய ரூபா 836,318 தொகையான சம்பள மீளளிப்பு கடன்பட்டோரின் கீழ் கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் பிளிசறு செயற்திட்டத்திற்காகக் கிடைக்கவேண்டிய ரூபா 3,831,190 தொகை கடன்பட்டோர் கணக்கில் இரு தடவை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) கடை வாடகை வருமானம் ரூபா 1,632 தொகை அதிகரித்து கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 166,350 பெறுமதியான 675 கிலோ கிராம் கூட்டுப்பசளை கையிலுள்ள இருப்பின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

02 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதி ரூபா 25,573,831 ஆக இருந்த போதிலும் அவற்றுக்குரிய பட்டோலைகளின் பிரகாரம் மீதி ரூபா 24,419,556 ஆனமையால் ரூபா 1,154,275 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 155,959,333 ஆக இருந்ததுடன் அத்திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 182,762,694 ஆகும். அதில் ஒரு வருடத்திற்கு மேல் செலுத்தவேண்டிய மற்றும் பெறவேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை முறையே ரூபா 95,843,969 மற்றும் ரூபா 151,789,156 ஆக இருந்தன.

(ஆ) ஓய்வூதியப் பங்களிப்புப் பணம் பல வருட காலமாகச் செலுத்தாமையினால் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 9,829,692 தொகையொன்று ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திற்குச் செலுத்த வேண்டியிருந்தது.

(இ) பல்வேறு காரணங்களின் அடிப்படையில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடவேண்டியிருந்த ஊழியர் கடன் முற்பணங்களின் கூட்டுத்தொகை ரூபா 1,889,098 ஆக இருந்ததுடன் அதில் 12 வருடங்களுக்கும் மேற்பட்ட காலமாக அறவிடப்படாதுள்ள 95 ஊழியர்களிடமிருந்து அறவிடவேண்டிய கடன்களின் பெறுமதி ரூபா 176,928 ஆகும்.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையினால் கூட்டுமொத்தமாக ரூபா 217,285,661 தொகையான கணக்கு மீதிகளைக் கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனான இணங்காமைகள்

இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம் 2001 முதல் 2014 வரையும், 2013 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளிலும் வழங்கப்பட்ட ரூபா 1,099,407 கூட்டுப்பெறுமதியான 27 செயல்நிமித்த உப கட்டுநிதிகளைத் தீர்ப்பதற்கும் மற்றும் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் காலாவதியான ரூபா 6,736,170 வைப்புக்கள் தொடர்பாகவும் உரிய பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது நகர சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 15,240,776 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 41,642,916 ஆக இருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டிற்காக சபையின் பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினங்கள் உரிய முரண்களுடன் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவின விடயம் | பாதிடப்பட்ட | உள்ளபடியான | முரண்கள் |
|---|---|---|---|
| | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| <u>மீண்டெழும் செலவினம்</u> | | | |
| ஆளணி வேதனங்கள் | 48,650 | 85,047 | (36,397) |
| ஏனையவை | 38,359 | 24,676 | 13,683 |
| உப மொத்தம் | 87,009 | 109,723 | (22,714) |
| மூலதனச் செலவினம் | 431,025 | 11,670 | 419,355 |
| மொத்தக் கூட்டுத்தொகை | 518,034 | 121,393 | 396,641 |

மீளாய்வாண்டின் போது மதிப்பிடப்பட்ட மூலதனச் செலவினங்களில் ரூபா 419,355 அதாவது 97 சதவீதம் செலவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நகர சபையினால் மீளாய்வாண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட | உள்ளபடியான | திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| (அ) | வீதவரியும் வரியும் | 16,734 | 16,983 | 76,359 |
| (ஆ) | வாடகை | 32,657 | 26,301 | 1,089 |
| (இ) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 912 | 742 | - |
| (ஈ) | ஏனைய வருமானம் | 339,050 | 17,507 | 28,258 |

04 வருமானங்கள் விடயங்களில் முன்னைய ஆண்டின் திரண்ட நிலுவையினதும் மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்ட வருமானத்தினதும் கூட்டுத்தொகை ரூபா 469,952,882 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் உள்ளபடியான வருமானம் ரூபா 61,532,047 ஆக இருந்தமையின் காரணமாக வருமான சேகரித்தலின் செயலாற்றல் 13 சதவீதமான கீழ் மட்டத்தில் காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் போது சபையினால் நிலுவை வருமானம் மற்றும் பட்டியலிடப்பட்ட வருமானங்களின் அறவிடல்களின் செயல்முன்னேற்றம் பின்வருமாறு.

| வருமானத் தலைப்பு | 2015.01.01 இல் உள்ளவாறு நிலுவை வருமானம் | நிலுவையில் அறவீடு | நிலுவை அறவிடலின் சதவீதம் | ஆண்டின் போது பட்டியலிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானத்தில் அறவீடு | அறவிடலின் முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா'000 | ரூபா'000 | % | ரூபா'000 | ரூபா'000 | % |
| வீதவரியும் ஏக்கர் வரியும் | 57,424 | 3,347 | 06 | 4,226 | 2,594 | 61 |
| வாடகை | 20,820 | 1,870 | 09 | 39,692 | 12,589 | 32 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | - | - | - | 1,662 | 537 | 32 |
| ஏனைய வருமானம் | - | - | - | 11,650 | 16,870 | 145 |

### 2.3.2 ஆதனவரி

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆதன வரி அறவிடல் நகரசபைக் கட்டளைச் சட்டத்தின் 170(1) மற்றும் (2) ஆம் பிரிவுகளுடன் சேர்த்துக்கூற வேண்டிய மாநகரசபைக் கட்டளைச் சட்டத்தின் 252, 255 மற்றும் 256 ஆம் பிரிவுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், நகர சபையின் கணனி நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் நிலுவை ஆதனவரியை அறவிடுவதற்கு சட்டரீதியான அனுமதிப்பத்திரமொன்று வழங்கப்படாத சந்தர்ப்பத்தின் போது ஒவ்வொரு அலகுக்காகவும் மிகைக் கட்டணத்தைச் சேர்த்தல் சுயமாக மேற்கொள்ளப்படுகின்றமையால், காலாண்டு இறுதியின் போது மிகைக் கட்டணம் கூட்டுச் சேர்த்தலில் பாரியளவிலான நிலுவைத் தொகையொன்று கணனி முறைமையினுள் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) ஆதனவரி அறவிடல் விடுவிக்கப்பட்டிருந்த புத்தளம் நகரத்தில் முஸ்லிம் பள்ளிவாயல்கள் இரண்டிற்குச் சொந்தமான 122 ஆதனங்களிலிருந்து ரூபா 3,858,138 தொகையான நிலுவை ஆதனவரி அறவிடவேண்டியிருந்தது.

(இ) ஆண்டின் ஆரம்பத்தில் முன்கொண்டுவரப்பட்டிருந்த நிலுவை ஆதனவரி ரூபா 57,424,471 ஆக இருந்ததுடன் பட்டியலிட்ட தொகை ரூபா 16,720,594 ஆகும். ஆண்டின் போது அறவிடப்பட்ட அளவு ரூபா 11,026,981 ஆனமையால் ரூபா 63,118,084 நிலுவையொன்று அறவிடவேண்டியிருந்தது. இது நிலுவைப் பணத்தில் 85% சதவீதமான பெறுமதியைக் கொண்டிருந்தது.

### 2.3.3 வாடகை

பொதுச் சந்தையில் இரண்டு இறைச்சிக் கடைகளின் நிலுவை வாடகை ரூபா 89,329 தொகை செலுத்துதல் புறக்கணிக்கப்பட்டிருந்த போதிலும், வாடகையாளர்களுக்கு எதிராக வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.4 முத்திரைக் கட்டணம்**

2015 சனவரி 01 இல் உள்ளவாறு நிலுவை முத்திரைக் கட்டணங்களின் கூட்டுத்தொகை ரூபா 4,047,325 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போது கிடைக்கவேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 5,985,784 தொகையுடன் கிடைக்கவேண்டிய மொத்தப் பெறுமதி ரூபா 10,033,109 ஆகும். இதில் மீளாய்வாண்டின் போது ரூபா 2,903,597 கூட்டுத்தொகையான முத்திரைக்கட்டணம் கிடைத்திருந்ததுடன் ஆண்டின் இறுதியில் ரூபா 7,129,512 தொகை மேலும் கிடைக்கவேண்டியிருந்தது.

**2.4 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2014 நவம்பர் 12 ஆந் திகதிய 25/2014 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் 87 ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டமையால் 87 ஊழியர்களில் மிகை ஏற்பட்டிருந்தது. இந்த பதவியணியினர் நிறுவனத்தில் சேர்க்கப்பட்டமையால், அவர்களின் சம்பளம் மற்றும் படிகள் உள்ளூராட்சித் திணைக்களத்திலிருந்து மீளளிப்புச் செய்யப்படாமையினால் 2015 ஆம் ஆண்டில் ரூபா 27,537,784 தொகை சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 87 ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டதன் பின்னரும் அமைய மற்றும் நாட் கூலி அடிப்படையில் 36 ஊழியர்களுக்காக ரூபா 8,498,223 தொகை சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) மிகையான பதவியணியினரை நாளாந்தம் சேவையில் ஈடுபடுத்தும் போது முன் நிகழ்ச்சித்திட்டம்/ மதிப்பீடு தயாரிக்கப்படாமல் முறையற்ற வகையில் சுகாதார மற்றும் வீதிப் பிரிவுகளில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல் மதிப்பீடு**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2015 ஆம் ஆண்டின் போது சபையினால் நிறைவேற்றுவதற்கு உத்தேசிக்கப்பட்ட ரூபா 13,800,000 கூட்டுத்தொகையான 06 வேலைகளை நிறைவேற்றுவதற்கு தவறியிருந்தது.

(ஆ) மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் ரூபா 416,100,000 தொகையான 12 அபிவிருத்தி செயற்திட்டங்களுக்கான உள்ளபடியான செலவினம் ரூபா 20,020,412 ஆக இருந்ததுடன் அதற்காக சபை போதியளவான பங்களிப்பைக் காண்பித்திருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 மற்றும் 2004 ஆண்டுகளின் போது அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக உள்நாட்டுக்கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெறப்பட்டிருந்த கடனுக்கான தவணைப்பணம் மற்றும் வட்டி உரிய பிரகாரம் செலுத்தப்படாதிருந்ததுடன் மொத்த

நிலுவை கடன் தவணைப் பணத்தின் கூட்டுத்தொகை ரூபா 322,721 ஆக இருந்ததுடன் நிலுவையாக இருந்த கடன்வட்டி ரூபா 399,161 ஆகும்.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 09 தீயணைப்பாளர்கள் சேவையாற்ற வேண்டியிருந்த போதிலும், அதற்குப் பதிலாக அமையத் தொழிலாளர்கள் அதற்காக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். எனினும் அவர்களில் இரண்டு பேர் ஓய்வு பெற்றுச்சென்றிருந்ததுடன், எஞ்சிய 07 பேரும் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியிலும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும், தீயணைப்பு வாகனம் பலவருட காலமாக செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டமையின் காரணமாக அவர்களின் சேவையையும் பயன்படுத்த முடியாதிருந்தது.

(இ) உள்ளுராட்சி ஆணையாளரின் (வடமேல்) 2012 செப்தெம்பர் 03 ஆந் திகதிய சங்/16/கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும், நிறுவனத்தில் போதியளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டிற்குரியதாக சபை 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தடவைகள் நடாத்தவேண்டியிருந்த போதிலும், அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.3 இனங்காணப்பட்ட நட்டம்

NWPF – 7982 ஆம் இலக்க வாகனம் விபத்திற்குட்பட்டு ஒரு வருடத்தை விஞ்சியிருந்த போதிலும், இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் இழப்பீட்டுப் பணம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. விபத்தினால் ஏற்பட்ட இழப்பீடு செலுத்துதல் நிராகரிக்கப்பட்டதனால் அதனைப் பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு முடியாதிருந்தமையால் சபைக்கு ரூபா 7,900,000 நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

### 3.4 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

கூட்டுப்பசளை செயற்திட்டத்தில் 2015 ஆம் ஆண்டில் ரூபா 2,626,550 தொகையான நட்டமொன்று காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த செயற்திட்டத்தை இலாபகரமானதாக அமுல்படுத்துவதற்கு சபையில் பொறுப்புவாய்ந்தவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. விற்பனை மேம்படுத்தல்களுக்காக எந்த நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. அவ்வாறே 2015 ஆம் ஆண்டில் கூட்டுப்பசளைச் செயற்திட்டத்திலிருந்து உருவான செயற்பாடுகள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

ரூபா 4,234,130 கூட்டுத்தொகையான ஒரு தண்ணீர் பம்பி மற்றும் 05 வாகனங்கள் என்பன விளைவற்று மற்றும் குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டன.

### 4.2 பொருள் மெய்மையாய்வு

2014 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட சிபாரிசுகளை அமுல்படுத்துவதற்கு அதிகாரத்தரப்பினர் நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக, வருடாந்த மெய்மையாய்வு நடாத்தும் பிரதான நோக்கம் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் ஒவ்வொரு

வருடத்திலும் தீர்வு காணப்படாமல் காணப்படுகின்ற பிரச்சினைகள் அதிகரித்துக் கொண்டு செல்வதைக் காணக்கூடியதாக இருந்தது.

## 4.3 கையேற்கப்படாத சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துதல்

---

நகர சபைக்குச் சொந்தமான காணிகளின் தீர்ப்பனவுத் தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக ஒப்படைப்புக் கட்டளை வழங்குமாறு புத்தளம் பிரதேச செயலாளரிடம் நகர சபை பல சந்தர்ப்பங்களின் போது கோரியிருந்த போதிலும், அந்த நடவடிக்கைகளைத் தாமதப்படுத்துவதனால் நகர சபை அபிவிருத்திச் செயற்பாடுகளை துரிதமாகவும் முறையானதாகவும் அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) உள்ளகக் கணக்காய்வு
(ஆ) கணக்கீடு
(இ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(ஈ) வருமான நிர்வாகம்
(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்